IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. – 100/2020

P.W.1 – எம்.வெங்கடேசன், த.பெ. முனி அய்ய நாயுடு

DATE – 26.03.2025

(சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில்)

வா.சா.1 குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)

1. வா.த.சா.ஆ.14 க்கு தலைப்பு ஏதும் இல்லை என்றால், சரிதான். அந்த ஆவணத்தில் நாங்கள் இரண்டு பேரும் கையெழுத்து போடவில்லை. அவர் எழுதி கொடுத்த ஆவணம். இந்த வழக்கை பிரதிவாதி எழுதிக் கொடுத்தாக கூறும் 5 புரோ நோட்டுகள் அடிப்படையில் தொகை வசூலிப்பதற்காக போட்டுள்ளேன் என்றால், சரிதான். வா.த.சா.ஆ. 14 ல் கடனை திருப்பி கொடுத்து விட்டு பாண்டை பெற்று கொள்வதாக எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

2.வா.த.சா.ஆ.14 ல் வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோநோட்டுகளின் தேதி குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வா.த.சா.ஆ.14 ல் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர்களின் பெயர் மற்றும் தகப்பனார் பெயர் மற்றும் விலாசங்கள் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். இந்த ஆவணம் குறித்து தங்களது வழக்குரையில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். இந்த ஆவணம் குறித்து வழக்குரையில் சொல்லாமல் இருப்பதால் இந்த ஆவணம் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. கடந்த 04.05.2020 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் இந்த

ஆவணம் குறித்து சொல்விட்டு வழக்குரையில் சொல்லவில்லை என்றால், வழக்குரையில் சொன்னேனா என்று எனக்கு ஞபாகம் இல்லை. ஆவணம் தங்களாலும், சாட்சிகளாலும் ஆவணம் எழுதியவராலும் கூட்டாக தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. பிரதிவாதி எந்த கடனும் வாங்கவில்லை என்பதால் தாவா தள்ளுபடியாகவேண்டும் என்று சொன்னால், சரியல்ல. தாங்கள் சொன்னது போல், பஞ்சாயத்து நடந்து இருந்தால் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோ நோட்டிகளின் தேதிகள் மற்றும் தொகைகள் ஆகியவைகள் குறிப்பிட்டு இருப்பீர் என்று சொன்னால், சரியல்ல. ஏற்கனேவே கையெழுத்து பெற்று இருந்த வெற்று தாளில் அந்த கையெத்திற்கு ஏற்றாற் போல் ஆவணத்தை சரிசெய்து தயாரித்துள்ளீர் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 26.03.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

Sd/G.Radhakrishnan
Additional District Judge(FTC)(FAC)
Vellore.